மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருச்சுழி.

அசல் வழக்கு எண். 221/2021

வாதி/பிரதிவாதி சாட்சியின் வாக்குமூலம் (1873ம் ஆண்டு சாட்சியச்சட்டம் 44வது பிரிவு 5ஆவது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.R.கலைச்செல்வி, கிரேடு III என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் : சுரேஷ் (வா.சா.1) | சாதி : |
| த/பெ.க/பெ : | மதம் : |
| கிராமம் : | தொழில் : |
| தாலுகா : | வயது : |

01.03.2024

வாதி தரப்பு சாட்சி 1 மீண்டும் அழைத்ததின் பேரில் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை –

1. நான் சென்னையில் மெக்கானிக்காக வேலை செய்கிறேன். சென்னையில் முதலில் 2015–2020 வரையும் தற்போது 6 மாதமாக வேலை செய்து வருகிறேன். எனது தாத்தா சின்னமுத்துவும் 1வது லக்க சொத்தை விற்ற பெத்த என்ற அப்பா செல்லையா என்பவரும் உடன் பிறந்தவர்கள் என்றால் இல்லை பங்காளிகள். செல்லையா, சின்னமுத்து ஒன்றாக விவசாயம் செய்து வந்தார்கள் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. பெத்து மற்றும் அவரது பிள்ளைகள் அம்மாசி, பூமி எனது அப்பாவிற்கு கிரையம் கொடுத்த விபரம் எனக்கு தெரியாது.

2. பெத்து எழுதிக் கொடுத்த சொத்து பட்டா மாறியதாக கூறி பிரதிவாதி காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்து அது சம்பந்தமாக விசாரணை நடைபெற்ற விபரம் எனக்கு தெரியாது. பெத்து தவறாக சொத்தை எழுதிக் கொடுத்துள்ளார் என்றாலும் அதற்கு வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ள நிலையில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2வது லக்க சொத்து 1978ல் வாய்கிரலாக கிடைத்தது என்று எனது அப்பா பொய்யாக சொல்கிறார் என்றால் சரியல்ல. அந்த சமயத்தில் நான் பிறக்காததால் எனக்கு தெரியாது. எனது அப்பா எனது பெரியப்பாவின் சம்மதம் இல்லாமல் தனியாக பட்டா போட்டுக் கொண்டார் என்றால் சரியல்ல. அது சம்பந்தமாக எனது பெரியப்பா பெத்தனன் எந்த கையெழுத்தும் போடவில்லை என்றால் சரியல்ல.

3. 2வது லக்க சொத்தை எனது அப்பா ஊர்ஜீதப்படுத்துவதற்காக எனது அக்கா சுமதி பெயரில் 2016ம் வருடம் தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்துள்ளார்

என்றால் சரியல்ல. நான் பொய்யான பட்டாவின் அடிப்படையில் தாவா 2வது லக்க சொத்தில் வீடு கட்டியுள்ளது செல்லாது என்றால் சரியல்ல. பிரதிவாதி விற்பனை செய்த சொத்து வேறு சொத்து என்றால்  சரியல்ல. அனைத்தும் பூர்விக சொத்தும் என்றாலும் பூர்விக சொத்து பிரிக்கப்படாததால் பிரதிவாதிக்கு பங்கு உள்ளது என்றால் சரியல்ல சொத்தை பிரித்துவிட்டார்கள். தாவா சொத்து சம்பந்தமாக பத்திரங்களோ, சாட்சிகளோ இல்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. 1வது லக்க சொத்து பெத்து அவரது மகனும் தவறாக எழுதிக் கொடுத்ததால் செல்லாது என்றாலும் 2வது லக்க சொத்து வாய்கிரலாக நாங்களும் எனது அத்தையும் , பெரியப்பா பிரித்து கொள்ளாததால் அந்த சொத்திலும் பங்கு உள்ளது என்றால் சரியல்ல. எனது அப்பா சட்டத்திற்கு புறம்பாக பட்டா மாற்றி உள்ளார் என்றாலும் அந்த பட்டா செல்லாது என்றாலும் சரியல்ல. வழக்கில் கண்ட 2 லக்க சொத்துக்களிலும் எனது பெரியப்பாவிற்கு உரிமை உள்ளது என்றால் சரியல்ல.

மறு விசாரணை –

4.இல்லை.